International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 05 Issue: 01 January to March 2023 www.irjtsjournal.org

# நாலடியார் நவிலும் பண்பாடு

பாண்டீஸ்வரி.மு

*தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்*

*ஸ்ரீகிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி*

*மேட்டமலை, சாத்தூர்,*

ஆய்வுச்சுருக்கம்:

மனித சமுதாயத்தைப் பண்படுத்துவதை இலக்காகக் கொண்டது இலக்கியம் எனப்படும்.அவ்விலக்கியம் காலத்தின் தேவைகளுக்கேற்ப புதிதுபுதிதாய் முகிழ்ப்பது இயல்பெனக் கூறலாம்.சங்கம் மருவிய காலத்தை சார்ந்த நீதி இலக்கியம் "நாலடியார்"ஆகும்.இது “நாலடி நானூறு” எனவும் பெயர் பெறும்.பதுமனார் என்பவரால் தொகுக்கப்பெற்ற நூல் ஆகும்.

நாலடியார் பாடல்களின் வாயிலாக அறியப்படும் தமிழர்களின் பண்பாடு இன்றைய மக்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.தமிழர் பண்பாட்டில் தலைசிறந்து விளங்கும் பண்புகளாக ஈகை, விருந்தோம்பல், பகுத்துண்ணும் பண்பு, மானம், இல்லாளின் சிறப்பு, பெரியோரைத் துணைகோடல், சினமின்மை போன்றவை திகழ்கின்றன..அதுமட்டுமின்றி தமிழர்கள் பண்பட்ட மனத்தோடும் உயர்ந்த சிந்தனையோடும் வாழந்து வந்தனர்.மனித இனத்தையும் மனத்தையும் பண்படுத்தும் நாலடியாரில் பதிவு செய்துள்ள பண்பாட்டை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

முன்னுரை:

இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி ஆகும்.அந்தந்த காலத்தைப் பின்வரும் தலைமுறையினருக்கு எடுத்துரைப்பதாய் இவ்விலக்கியங்கள் அமைகின்றன.பண்டைய தமிழ் மக்களின் நாகரிகம், அரசியல், சமயம், தொழில், பண்பு முதலியவற்றை அறிவதற்கு நமக்கு துணை நிற்பன கல்வெட்டுக்கள், நாணயங்கள், பட்டயங்கள், பிற நாட்டார் எழுதி வைத்த குறிப்புகள் மூலம் அறியலாம்.தமிழ்மக்களின் பண்பாட்டினை அறிவதற்குத் துணை நிற்பன நமது இலக்கியங்கள் ஆகும். பண்பாடு என்பதற்கு பண்பட்ட எண்ணமும், சொல்லும், செயலும் ஒருங்கிணைந்த திருந்திய நிலையாகும்..இத்தகைய பண்பாட்டு பதிவுகளை நம் முன்னோர்கள் வடிவமைத்த அற இலக்கியமான நாலடியார் பாடல்களின் வாயிலாக ஆராய்ந்து பார்க்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

ஈகை:

“வாடிய பயிர்களைக் கண்ட போதெல்லாம் வாடினேன்”என்ற வள்ளலாரின் இரக்க உணர்வு, ஒவ்வொருவரின் மனதிலும் ஈரத்தைக் கசிய செய்கிறது.மக்களின் துயர் துடைக்க தோன்றிய எத்தனையோ வள்ளல்களின் பெயர்கள் இன்றும் நம் நினைவில் நிற்கின்றன.பண்டைய காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் தம்மிடம் உள்ள செல்வத்தைத் தாம் மட்டும் அனுபவிக்க வேண்டும் என்று நினைக்காமல், அனைவருக்கும் கொடுத்து அவர்களும் இன்புற்று வாழ வேண்டும் என்ற பொதுநலக் நோக்கோடு வாழ்ந்தனர்..இதனை,

“ ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு” (திருக்குறள்-23)1

ஏன்ற குறள் வலியுறுத்துகின்றது.எந்தப் பொருளும் இல்லாதவர்களுக்கு நாம் மனம் உவந்து ஒன்றை பிறருக்குக் கொடுத்தலே ஈகையாகும். இதனை,

“இம்மி யரிசித் துணையானும் வைகலும்
நும்மில் இயைவ கொடுத்துண்மின் -உம்மைக்

கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்து

அடாஅ அடுப்பி னவர்" (நாலடியார-94)

என்ற அடிகள் மூலம் அனைவருக்கும் கொடுத்து உண்ணும் பண்பை வலியுறுத்துகின்றன.அடுத்தவருக்குக் கொடுத்துண்ணாத மாக்கள், சுடுகாட்டில் உள்ள காய்க்காத ஆண்பனை போன்றவர்கள் ஆவார்கள் என்ற கருத்தையும் எடுத்துரைக்கின்றன.

பகுத்துண்ணும் பண்பு:

பழந்தமிழர் பகுத்துண்ணும் பண்பினைப் பெரிதாகப் போற்றினர்.கிடைத்தற்கரிய அமிழ்தம் கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாமல் அனைவரோடும் பகுத்துண்டு வாழ்ந்தார்கள் என்பதனை,

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரா்

அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்

தமியர் உண்டலும் இலரே:முனிவிலர்(பா-182-வரி1-3)"2

ஏன்ற புறநானூற்று வரிகள் தெளிவுப்படுத்துகின்றன.மேலும் திருவள்ளுவரும்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்துவற்றுள் எல்லாம் தலை"(திருக்குறள்-322)3

எனப் பகுத்துண்ணும் பண்பை தலை சிறந்த அறமாக குறிப்பிகின்றார்..இக்கருத்தையே,

" பரவன்மின்;பற்றன்மின்; பாத்துண்மின்;யாதும்

கரவன்மின்; கைத்துண்டாம் போழ்து"( நாலடியார்-22)

என்ற பாடல் அடிகள் கையில் பொருள் இருக்கும் போதே பலருக்கும் பகுத்து உண்ணுங்கள் என்ற பண்பை தெளிவுப்படுத்துகின்றன.காக்கை இனத்திடம் இருந்து பகிர்ந்து உண்ணும் பழக்கத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

விருந்தோம்பல்:

இல்வாழ்க்கையின் பயன் விருந்தோம்பல் ஆகும்.'விருந்து' என்ற சொல் முதலில் புதுமையைக் குறித்து, பின்பு விருந்தினரைக் குறித்தது என்பதை,

" விருந்தே தானும்

புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"(தொல்-பொருள்-நூற்பா540)4

ஏன்ற தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம்.வந்த விருந்தினரை உபசரித்து விட்டு, இனிவரும் விருந்தினரை உபசரிக்கக் காத்திருப்பவன், தேவர்களுக்கு நல்ல விருந்தினனாவான் என்று கூறுகிறார்.இதனை திருவள்ளுவரும்,

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பாத்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு"(திருக்குறள்-86)5

என்ற குறள் வழியாக உணர்த்துகிறது.இது மட்டுமின்றி மணிமேகலையும் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" எனக் குறிப்பிடுகின்றது.சங்க கால மக்கள் ஈதலையும் விருந்தோம்பலையும் இரு கண்களாகப் போற்றினார்கள்.

பழங்காலத்தில் உணவு விடுதிகள் இல்லாத காலம். .வெளியூருக்குச் செல்வோர் பல நாளுக்கு வேண்டிய உணவினைக் கொண்டு செல்ல இயலாது.செல்வர்களும், வணிகர்களும் தேர்களிலும், மற்ற ஊர்திகளிலும் செல்லும் போது, உணவிற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு செல்ல முடிந்தது. மற்றவர்கள் உணவையோ, உணவுப்பொருட்களையோ கொண்டு செல்ல முடியாத நிலையில் இருந்தது.இதனால் உணவின்றி வருந்துவோருக்கு உணவளித்தல் இன்றியமையாத அறமாக போற்றப்பட்டது.இதனை நாலடியாரில்,

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

"இம்மி அரிசி துணையானும் வைகலும்

நும்மில் இயைவ கொடுத்துண்மின்"(நாலடியார்-94)

ஏன எடுத்துரைக்கின்றது.நம் இல்லம் தேடி வருவோர்க்கு இம்மி அரிசி அளவாயினும் இயன்றது கொடுத்து பிறகு உண்ண வேண்டும் என எடுத்துரைக்கிறது.

இன்சொற்களைப் பேசுதல்:

இன்முகத்துடன் பேசும் சொற்களில் பயன் அதிகமாக இருக்கும் .நாம் இனிமையான சொற்களைப் பேசும் பொழுது, அதனைக் கேட்பவருக்கு மகிழ்ச்சியான மனநிலையைத் தருகிறது.அதுமட்டுமன்றி உறவுகளை வலிமைப்படுத்தும்.நல்ல நடத்தையை அதிகரிக்கச் செய்யும்.பிறர் மனத்தைப் புண்படுத்தாத சொற்களே இன்சொற்கள் ஆகும்.நாம் எதிர்நோக்குபவர்களில் புதியவர், சிறியவர், பெரியவர், நண்பர், உறவினர் என எவராக இருந்தாலும் அவரிடம் இனிமையாகப் பேசுதல் சிறப்பைத் தரும்.நாம் பிறரிடம் நலம் விசாரித்தல், உபசரித்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் போது இனிமையாக பேச வேண்டும் .பிறர் நம்மிடம் இனிமையாக இன்சொற்களைப் பேச வேண்டும் என்று எண்ணுகிறாமோ, அதே போல் நாமும் பிறரிடம் இனிமையாக பேச வேண்டும் .இதனை நாலடியாரும்,

"ஈயும் தலைமேல் இருத்தலால் அஃதறிவார்

காயும் கதமின்மை நன்று"(நாலடியார்-61)

என கோபம் கொள்ளாமல் பொறுமையாக இனிமையாக பேச வேண்டும் என எடுத்துக்கூறுகிறது.அதனால் எப்போதும் நாம் அடுத்தவர் மனம் வருந்தும்படியாக கடுஞ்சொற்களைப் பேசக்கூடாது.

சினம் கொள்ளாமை:

நாம் .சினம் கொள்வதால் நன்மையில்லை. சினம் அறிவைச் சிதைத்து விடும்.சினம் உண்மையை உணர விடாது.சினத்தை அடக்குவதே பல நேரங்களில் எல்லோருக்கும் நன்மையைத் தரும்.கோபத்தில் பேசி விட்டு, அவகாசம் எடுத்து அழுவது முட்டாள்தனம், .சினத்தை அடக்க பழக வேண்டும்.இதனை நாலடியார்,

"காவா தொருவன்தன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்

ஓவாதே தன்னைச் சுடுதலால் -ஓவாதே

ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்

காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து"(நாலடியார்-63)

என வலியுறுத்துகின்றன.அறிவுடையவர்கள் எப்போதும் சினம் கொண்டு கடுமையான சொற்களைச் சொல்ல மாட்டார்கள்அதுமட்டுமின்றி சினம் கொண்டவன் பிறரிடம் கூறி துள்ளிக் குதித்து தூணில் முட்டிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வர்.இதனை,

"உள்ளத்தான் உள்ளி உரைத்துராய் ஊர்கேட்பத்

துள்ளித்தூண் முட்டுமாம் கீழ்" (நாலடியார்-64)

ஏன எடுத்துரைக்கின்றது. சினம் தன்னை அழிப்பதோடு தன்னைச் சார்ந்தவர்களையும் அழிக்கும் தன்மை கொண்டது.எனவே சினம் கொள்ளாமல் இருத்தலே சிறப்பு.

மானம்:

'உயிரை விட மானம் பெரியது' என்ற உயர்ந்த கொள்கையைக் கடைப்பிடிப்பவர்கள் நம் தமிழர்கள்.மானம் என்னும் பண்பை ஒரு விலை மதிக்க முடியாத உடைமையாகக் கருதினர்.மானம் அழிய வந்த இடத்து உயிரை விட துணிந்தவர் நம் தமிழர்கள். இக்கருத்தை திருவள்ளுவரும்,

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்

உயிரநீப்பர் மானம் வரின்"((திருக்குறள்-969)6

என்ற குறளில் வலியுறுத்துகின்றார்.

"வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்

மானம் அழுங்க வரின்"(நாலடியார்-300)

என்று நாலடியாரில் பெரியோர்களுக்கு விண்ணுலகத்தைப் பரிசாக கொடுத்தாலும் மானம் கெட்டு எந்த செயலையும் செய்ய மாட்டார்கள்.என எடுத்தியம்புகிறது.

இல்லாளின் சிறப்பு:

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் தனித்தனியாக வாழ்தல் என்பது முடியாத செயல்.அதனால் தான் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் ஒருவரையொருவர் துணையாகக் கொண்டு, இவ்வுலகில் வாழ்க்கை நடத்துகின்றனர்.அதாவது குடும்பத்தின் மீது அன்பும் பிறருக்கு உதவும் அறனும் இருப்பின் அதுவே சிறந்த இல்வாழ்க்கையின் பயன் என்று கூறுகிறது.ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி இருவரும், ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து அன்போடு இணைந்து, இல்லறம் நடத்த வேண்டும்.மனைவி என்பவள் எப்படி இருக்க வேண்டும் என்பதை,

"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்

உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள்"(நாலடியார்-384)

ஏன நாலடியார் வலியுறுத்துகின்றது.கணவனது கண்ணுக்கு இனியவளாய், கணவன் விரும்பும் வகையில், அழகு செய்து கொள்பவளாய், ஊராருக்கு நாணும் கூச்சம் உடையவளாய், கணவனுக்கு அஞ்சி, இடமறிந்து அவனோடு ஊடல் கொண்டு இன்பமாக, கணவனது நிலை அறிந்து ஒழுகக்கூடியவள்தான் சிறந்த மனைவி ஆவாள்.

பெரியோரைப் பிழையாமை:

கல்வியறிவு, வயது, அனுப அறிவால் உயர்ந்தவர்களைப் பெரியோர்களாகக் கருதுவர்.பண்பால் உயர்ந்த பெரியோர்களை மதித்து போற்றும் பண்பு இருந்து வந்தது.ஆனால், இன்று பெரியோர்களை மதிக்கும் பழக்கம் குறைந்து வருகிறது. இதனை

-விளிவின்றி

அல்கு நிழல்போல் அகன்றகன் றோடுமே

தொல்புக ழாளர் தொடர்பு"(நாலடியார்-166)

என பெரியோர்களின் நட்பு பிற்பகல் நிழல் போல வளரும் எனக் தெளிவுப்படுத்துகின்றன.பெரியோரை மதிக்காது செருக்குடன் வாழ்பவன், அறிவு அற்றவன் எனக் கூறுகிறது.பெரியோர்கள் எப்போதும் வந்த துன்பத்தைப் போக்க, இனி வரும் துன்பத்தைப் போக்கக்கூடியவர்கள்.

தொகுப்புரை:

மனிதன் தன்னையும் ,தன்னைச் சார்ந்தவர்களையும் நல்ல நெறிகளில் ஈடுபட்டு ஈர்த்து வாழும் நிலையை உணர்நதனவாக இருக்கும்போது தான் வாழ்க்கை சிறப்படையும்.சமுதாயத்தை மேம்படுத்தும் சமுதாய சிந்தனைகளான விருந்தோம்பல், ஈகை, மானம், இல்லறச் சிறப்பு , பெரியோரைப் பிழையாமை, சினமின்மை ,இனிய சொற்களைப் பேசுதல் முதலானவும் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன.இத்தகைய பண்பாட்டு சிந்தனைகளைப் பின்பற்றி நடப்பது இன்றைய சமுதாயத்தை இலட்சிய பாதையில் அழைத்துச் செல்லும் ..

## துணை நூற்பட்டியல்:

[1] சண்முகம்பிள்ளை.மு(ப.ஆ)- தொல்காப்பியம் பொருளதிகாரம்- இளம்பூரணர் உரை-2000(மூ.ப),பாரிநிலையம், சென்னை

[2] நாமக்கல் கவிஞர்(உ.ஆ)-திருக்குறள் மூலமும் உரையும்-2017(மூ.ப),காமதேனு நிலைம், சென்னை

[3] பாலசுப்பிரமணியன் கு.வெ(உ.ஆ)புறநானூறு மூலமும்உரையும்-2017(ஆ.ப)நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

© 2023, IRJTSR